

# விணன் இன் (க)விதைகள்

உரிமம் விணன்

Creative Commons Attribution- 4.0 International License.
சர்வதேச உரிமத்தின் கீழ் பகிரப்படுகிறது

முதல் மின்பதிப்பு : டிசம்பர் 2019
அட்டை ஓவியம், வடிவமைப்பு : விணன்

Creative Commons Attribution-Share Alike 4.0 International License

**You are free: to Share — to copy, distribute and transmit the work; to make commercial use of the work Under the following conditions:**

**Attribution — You must attribute the work in the manner specified by the author or licensor (but not in any way that suggests that they endorse you or your use of the work).**

**No Derivative Works — You may not alter, transform, or build upon this work.**

*காப்புரிமை தகவல்:*

*நூலில் எந்த ஒரு மாறுதலும் செய்ய அனுமதியில்லை என்ற நிபந்தனையின் கீழ் பதிப்புரிமை வழங்கப் படுகிறது.*

*இதனை விலையில்லாமல் விநியோகிக்கவோ, அச்சிட்டு வெளியிடும் செலவினை ஈடுகட்டும் விதமாக கட்டணம் வசூலித்து விற்பனை செய்யவோ முழு உரிமை வழங்கப்படுகிறது.*

விணன் இன் (க)விதைகள்

First Electronic Edition : December 2019
Cover Art and Design : Vinan
ISBN : 978-81-939536-0-0

**மின்னூல் வெளியீடு** : ஸ்கைஃபாக்ஸ் பதிப்பகக் குழு

Skyfox Publishing Group (http://skyfox.co/)

தஞ்சாவூர்

# உள்ளடக்கம்


| வரிசை எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | எ(அ)ண்ணம் | 1 |
| 2. | ஊக்கமருந்து | 2 |
| 3. | அறப்பணியாளர் | 3 |
| 4. | என் தாயே!! | 4 |
| 5. | அப்பாவின் ஆசை | 5 |
| 6. | வாரிசே வருக | 6 |
| 7. | நான் கடவுள் | 7 |
| 8. | சூப்பர் மேன்- ஓர் சோகக் கதை | 8-9 |
| 9. | கவிதைக்கு ஒரு கவிதை | 9 |
| 10. | இலை இல்லை விலை | 10 |
| 11 | நீர்- ஆழம் காணும் பயணம் | 11 |
| 12. | உலகின் கிரீடம் குப்பையிலோ? | 12 |
| 13. | தி ஆர்-இ | 13 |
| 14. | மண்ணை மீட்டெடு சோழா | 14 |
| 15. | ஸ்ரீ நீ | 15 |
| 16. | காதல் | 16 |
| 17. | காதல் ஈந்த பார் | 17-18 |
| 18. | காதலிக் (க) விதை | 19 |
| 19. | காதலுக்காக | 20 |
| 20. | மாயவிசை | 20 |
| 21. | வேண்டும் ஓர் பிறவி | 21-22 |
| 22. | ஆசை | 23 |
| 23. | துயரத்தில் தந்தை | 23 |
| 24. | கருவறை முதல் கல்லறை வரை | 24 |
| 25. | வரவேற்பு | 24 |
| 26. | நன்றி | 25 |

# எ(அ)ண்ணம்



இந்த வண்ணமற்ற ஓவியம் இங்கே
எம்மால் வரையப்படவில்லை
கண்களெனும் கருவியால்
உம் மனதில் விதைக்கப் பட்டிருக்கிறது
உங்களால்  காணப்படுவது
உங்கள் எண்ணங்களின் பிரதிபலிப்பே:-

**எண்ணம் போல் வாழ்க்கை**

- விணன்

# ஊக்கமருந்து

- நீ ஊக்கம் அருந்து

இமயமும் கூட சிறு குன்றாகும்,
இதயம் அது வலிமையாகையில்
மரியானாவும் கூட சிறு குட்டையாகும்,
மனம் ஆனது பேரமைதி ஆகையால்
அமீபாவும், பெரும் அரக்கன் ஆகும்:
நீ - சிறு அச்சம் கொள்கையில்;
அகில உலகும் உனக்கு அடிமையாகும்,
கண்ணா - உன் திமிர் சிலிர்க்கையில்;
களத்திலே உம் நடையின் கர்வம்,
எதிரியின் ஈரக்குலையில் ஈட்டியை இறக்கும்;
சென்று வா! மகனே, வென்று வா!!

கரும்பலகை நடுவினிலே நற்-
கருத்து பல பதியக்கண்டோம்;
கருத்தறிவித்த குருவே உமக்காய்,
கற்றவை அனைத்தும் கப்பலேற்றி,
கல்லாதார் இல்லையெனும் நிலையைஇப்
பார் முழுதும் உருவாக்குவோம்- நல்
பண்பினையே அதற்கு வழியாக்குவோம்:
வெற்றியென்பது நிச்சயம் உண்டு, அதை பற்றிச்
சுவைக்கத் துடிக்கும்- நெஞ்சமும் எமக்கு உண்டு,
எட்டுத்திக்கும் சென்று புகழ்பெற, எம்மை
விதைத்திட்ட பெரும் வித்தகனே!
நீயும், உம் புகழும், வாழ்க!
நீங்காது நாளெல்லாம் வாழ்க!! வாழ்க!!!

**- விணன்**

# அறப்பணியாளர்

அகரம் கற்பித்த அருட்பெரும் ஜோதிநீயே!
அறிவுக்கு சுவையூட்ட, ஆடிப்பாடிய சகதோழனே!
வித்தையை வேரூன்றிய வெற்றி வீரனே,
தனித்தன்மை கண்டறிந்த அறிவுச் சுடரே:-
அன்பிற்கும் அறிவிற்குமான அற்புத பாலமே,
திறன் மேம்படுத்திய தீர்க்க தரிசியே;
ஊக்குவித்து உருவாக்கும் உன்னத உள்ளமே!
சிகரத்தை சீரமைக்கும் சத்தான அடித்தளமே:
கண்டகனவு கைசேர, கருவியாய் நின்றவனே;
தவறைத் தடுக்க தண்டித்த காவலனே,
அறிவுப்பசியை தீர்க்க எண்ணமிட்ட எந்திரனே,
அஞ்ஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், எவற்றையும்;
தன்ஞானம் ஏற்றி விரிவுரைக்கும் எம்ஞானியே!!
சொல்லை நாணேற்றி, நாவை வில்லாக்கி,
நீ நடத்தும் யுத்தத்தில் அகலும் அறியாமையும்:-
கணக்கின்றி கொடுத்தமையால்; பெருக்கெடுக்கும் அருவியாய்,
அறிவின் உச்சம் தொட்ட அறிவாளனே-
அடக்கத்தின் அம்சமாய்; எளிமையாய் வாழ்பவனே,
உம்மால் கற்ற எமக்கும், சென்ற இடமெல்லாம் சிறப்பே!!!

மாண்புமிகு மாணவன்
- விணன்

# என் தாயே!!

நான் என்ன பொக்கிஷம்? பெருந்துயரா?

அழகிய கூந்தல் உதிர்த்தாயே;
கொடி இடை பெருத்தாயே;
பிடித்தது விடுத்தது - பத்தியம் எடுத்தாய்;
வலிகளை ருசித்து சிரித்தாய்;
மரணவாயில் வாசலைநோக்கி விசைந்தாயே;
என்னை ஈன் றெடுத்தாயே;
மழலை மொழி மகிழ்ந்தாய்;
உறவுகள் கற்றுக் கொடுத்தாய்;
குறும்புகள் பல ரசித்தாயே;
தூளியிலே நானழுக - துயிலுரித்து விழித்தாயே;
இத்தகு உன்னை கண்கலங்க வைப்பேனா?
காதல் என்றுரைத்து உன்கனவு கலைப்பேனா?
அது கடமையோ: உரிமையோ - தாயே!!
என்னவள் தேர்கை உன்பாதம் சமர்ப்பணம்!!!

- அன்பு மகன்
விணன்

# அப்பாவின் ஆசை

பிஞ்சு கைகளில் பிரபஞ்சத்தைப் பிடிப்பாயோ!
ஆழ்கடல் அனைத்தையும் அடிவைத்து கடப்பாயோ!!
உனக்கென்றொரு உலகம் அதிலே - நீயும்;
உருவம் ஏற்று தவம் இருக்க-
அன்னை ஊட்டும் அமுதம் ஏற்று;
ததும்பும் நீரில், துள்ளிக் குதித்த;
உன் இதயத்துடிப்பின் அசைவை உணர்கையில்,
உற்ற அஞ்ஞானம் தெளிவு பெற்று;
உன்னத உண்மையாக உலகை ஆளும்,
ஆதிபகவன் - அன்பென, வியந்தேன் கண்ணே!!
ஈர்-மூன் மாதந்தனில் முற்றிலும் முத்தே;
மூவிரு ருசிகளிலும் ருசித்துத் தேர்ந்தாயோ??
புளிப்பை நாடும் புதுமைப்பெண் உனக்காக!!
அள்ளித் தூக்கி அரவணைக்க அதையும்,
பாட்டுப் பாடி தாலாட்ட பாட்டியும்,
தோளில்தூக்கி கூத்தாட தாத்தாவும்,
காத்து காத்து காலங்கள் கடந்தன!!!
ஈரைந்து மாதங்களாய் செதுக்கிய சிற்பமே!
நீ கண்திறக்கும் நாளை நோக்கி,
காத்திருக்கும் என் இரவுகளும்: உன் உறவுகளும்:
வம்சம் வளர்ந்திட வந்திடுவாய் வேல்கொண்டு!!!

- அப்பா வாகிய
விணன்

# வாரிசே வருக

அன்பின் உருவாய் கருவில் வளரும்,

ஆற்றல் மிக்க அற்புதமே!

அன்றும், இன்றும், என்றும் மாறா,

ஆலயம் கண்ட கோபுரமே!

பார்த்த நொடி  மெய்மறக்கும் ;

நல் வசீகரக் கண்ணனோ?!

குடகுமலை தேன்சுவைக் கிணையான;

குரல் கொண்ட குழலியோ?!

பிரபஞ்சஞானம் உணர்த்தும் விதம்,

உன் அழுகை ராகமோ??

பளிங்குக்கண் தரிசனம் கிட்ட,

தவம் கிடைக்கும் தந்தையுடன்;

உன் பசிதீர்க்க நூலுரித்து,

பாசமூட்ட ஏங்கும் தாயும்:

பிஞ்சு பாதங்கள் நெஞ்சைப்பிளக்க,

பரிதவிக்கும் உறவுகள் பலவும்...

நாட்கள் கடக்க ஏங்கித் தவிக்கையில்;

சுகப்படட வந்து, ஏக்கம் தீர்த்து;

ஊக்கம் அளிக்க நீ வருவாயாக!!!

- விணன்

# நான் கடவுள்

பூத்துக் குலுங்கும் சோலைவனம் நடுவே;
காய்ந்து நிற்கும் நீள மரம் கண்டேன் - அது நான்;
பின்பே உணர்ந்தேன், 'நான் ஒளிவீசும் மின்கம்பமென்று'!
சுற்றிவரும் சக்கரம் நடுவே, சுழலாத
வெற்றுக் கம்பியாய் கிடந்தேன் - அது நான்;
பின்பே உணர்ந்தேன், 'நான்தான் அச்சாணி என்று'!
பறந்து செல்லும் பறவைகள் இடையே;
பறக்க முடியா பாவியாய் நின்றேன் - அது நான்;
பிறகுதான் தெளிந்தேன் 'நான் கோபுரம் என்று'!
தன் தந்தம் கொண்டு காட்டையே சாய்த்த
பல யானைகள் இடையே ஓர் குழந்தையாய் நின்றேன் - அது நான்;
அவை மிரண்டோடச் சிரித்தேன் 'நான் சிங்கம் என்று'!
சுற்றிலும் மின்னும் பூக்களிடையே ஓர்
நீல பூவை மட்டுமே சுற்றி வந்தேன் - அது நான்;
மனிதன் என்மேல் கால்பதிக்க பிரமித்தேன் 'நான் நிலவு என்று'!
உறவு, பாசம், நேசம், அன்பு, இவற்றைப் பகிர்ந்த
மக்கட்செல்வங்களிடையே ஏலியனைபோல் தனித்து நின்றேன் - அது நான்;
அவர்கள் என்னை நாட களிப்புறத் தொடங்கி விட்டேன்

- "அகம் பிரம்மாஸ்மி "

- விணன்

# சூப்பர் மேன்

**- ஓர் சோகக் கதை**

உலகை ஆளும் வல்லமை எமக்கு!
நான் பேச கேட்பார் இலர்;
என்பேச்சை மறுப்பார் சிலர்-
அவரும் வந்து சிரம் தாழ்த்தையில்,
கரம் கொடுத்து துணை நிற்பேனே!
வர்த்தகத்தின் வாரிசாய் வந்தவன்,
உலகையே ஆளும் மன்னரானது காவியம்:
பூமியை மாசுபட சுழலவிட்ட நானே;
பின் அதில் மாசடைந்து சுழலவும் ஆனேன்!
விதைத்த விதையை அறுவடை செய்வது,
விதியின் கோர விழைவு அன்றோ!
சிகரத்தின் உச்சியில் சாதித்த நானே,
கடலின் மடியில் உரங்களும் ஆனேன்;
சுற்றத்திற் குத்தவும் “சூப்பர் - மேன்” என்னை,
மண் கூண்டில் புதைப்பது சரிதானா மூட??
என் புண் சிரிப்பைக் கேட்க- நண்பா
ஏழையின் முகமும் மலரும் - அனால்,
ஊரார் சிரிக்க செல்வந்தற்கு பதறும்::

நாட்டின் மதிப்பை எடைபோடும் நானும்,
சில ஏட்டின் பதிப்பிற்கு சிரம் தாழ்ந்து போனேன்!!
அகத்தோடு பேசும் வல்லமை பெற்ற என்மேல்,
சிலர் முகம் பதித்து ஏளனிப்பது ஏனடா?
பிறர் வியர்வைமழையில் வளர்ந்த என்னை,
தீயிட்டு பொசுக்கும் பாவம், விடாதுன்னை:
கண்ணில் பட்டதை தன் வசமாகும் உன்னை,
மண்ணும் ஒரு நாள் தன் சொந்தமாகும் போடா:-

- பணத்தில் பற்றற்ற விணன்

# கவிதைக்கு ஒரு கவிதை

கருநிலவின் கருவில் வளர்ந்த முல்லைக்கொடியே;
மொழியின் இசையில் கலந்தோனே; உயர்-
தமிழின் உரை-நடையில் வீற்றிருப்பவனே;
கனவிற்கு கலம்தந்த கலங்கரை விளக்கமே!
காட்டில் பிறந்தவனை கரம்பிடித்த கலைஞானியே!
காதலுக்கு அடிப்படையாய் அமைந்த அற்புதனே:
கவிஞனால் கவிதைக்கு பெருமையன்று; அழகிய,
கவிதையிலே கவிஞனுக்கு பெருமை என்றும்!!!

- பெருமையுடன் விணன்

# இலை

**- இல்லை விலை**

விதையின் விளிம்பில் பிறப்பெடுத்து,
விருட்சம் முழுதும் படர்ந்து நின்றும்,
கண்களைக் கவரா மாயாஜாலனே!
துயரத்தில் கண் மயக்கி,
அருகில் வர அலட்சியப்படுத்தும் அற்புதனே!
விருந்து முதல் மருந்து வரை;
அனைத்திலும் கலந்த உயிர் சிலையே!!
மரங்களின் மானம்காக்கும் மேலாடையை;
பூக்களுக்கும், காய் கனிகளுக்கு:-
சக்தி ஊட்டும் சத்குருவே!!
காலம் கடக்க வண்ணம் மாறும்
வல்லமை கொண்ட வனவாசனே;
காற்றில் அசைந்து காதல் பேசி,
என்னுடன் உரையாடும் உன்னத உயிரே!
காற்றின் ஓசை என் காதில் உரைக்க,
கைதட்டிக் களிப்பூட்டும் இலைக்களஞ்சியமே!
உயிர் பிரிந்து உதிர்ந்தால் கூட,
இம்மண்ணுக்கு உரமாக இமயமாய் எழுபவனே;
உன் யுக்தியை நினைக்கையில் தான்
மனம் பறைசாற்றத் துடிக்கிறதோ??

**- விணன்**

# நீர்

- ஆழம் காணும் பயணம்

அகில உலகை அரவணைக்கும் - அன்பின் உருவமே;
பல கோடி குடும்பம் வாழ வித்திட்ட குபேரனே-
பல்வேறு பொக்கிஷங்களை உள்ளடக்கிய உன்னதனே;
மரியானாவில் மாற்றம்கண்ட அழுத்தத்தின் ஆசானே;
பனிக்கட்டியில் பதுங்கியுள்ள பாசத்தின் பிணைப்பே;
ஆதிபகவன் அன்பில் உருவெடுத்த அற்புத மழையே!
கரிக்கும் கற்கண்டை கடன்கொடுத்த கருநீலனே;
கருணையின் உருவான கண்ணீரில் வீற்றிருப்பவனே;
காற்றில் கலந்து கருமேகம் படைப்பவனே;
காகிதத்தில் காவியம் படைக்கும் மை-யில் கலந்தவனே;
களிப்புறும் காமத்தில் சீறிப்பாயும் சந்ததியே !!
காடு - மலை பாராமல் பாய்ந்தோடும் புண்ணியனே;
மனித பாரம் சுமக்கும் உன்னால்-அவன்படைத்த,
கழிவு பாரம் பொறுக்குதில்லையோ??? பொறுமைக்கும்,
எல்லை உண்டென கண்டேன் கடற்கரையில் --
நீர் கால்பதித்த இடமெங்கும், கோரத்தாண்டவம்-
அரங்கேறக்கண்ட உலகம் :- தண்ணீரே:
இனியேனும் திருந்தட்டும் இவர்களென்று, கண்மூடி
பிரார்த்திட்டேன் நானும்:- ஆறுதலை நீயும், என்
இமையின் ஓரம், இனி இல்லை
நான், உலகின் பாரம்!!!

- விணன்

# உலகின் கிரீடம் குப்பையிலோ?

பொறுமையின் உயர் சிகரமே,
தீரா வரம் பெற்ற வன்மமே!!
எதையும் தாங்கும் துயரமே,
பலர் வாழ்வைச் செழிப்பிக்கும் செல்வமே,
தெருக்களை அலங்கரிக்கும் வைரமே,
ஊழல் இல்லாதோர் உண்மையே-
மூலை முடுக்குகளை கைப்பற்றும் மன்னரே:
காற்றை காதலிக்கும் கற்பூரம்!
குழந்தைகள் வெறுக்கும் மைதானமே;
ஆன்றோர்கள் புறக்கணிக்கும் குலவிளக்கே--
குளங்களைக் கைப்பற்றிய குருவே,
ஆற்றிலே பாய்ந்தோடும் அலைகடல்;
பெருங்கடலைச் சென்றடையும் களஞ்சியமே:
நீ இல்லா பூமியும் சொர்கம்தானோ??

- விணன்

# தி ஆர்-இ

வானில் கொட்டிக்கிடக்கும் நட்சத்திரம் நடுவே,
பலர் கண் கவரும் முழு நீர்மதி போல,
தெருவில் கறகறக்கும் பல வாகனம் நடுவே,
தனி பட! பட! ஓசையுடன் நீயோர் காளையென:
அனைவர் கண் கவரும் திமிறினைக் கொண்டு,
பறந்து வந்தாய் என் ரதம் என்று!!
உம் ஓசைகேட்டு எம் வருகை நாடி,
வருவாள் என்னவள் வாசல் தேடி!
உம் - புடு! புடு! ஓசை காதில் வீழ்கையில்,
குடு- குடு  வென ஓடி ஒளியும் மழழை செல்வங்கள்:
வாசலில் நிறுத்தி அவர்களைக்கண்டு – நான்,
முகம் புன்னகைக்கும் பொன்னான வேளையிலே;
சிரித்தபடி, என்னையும் கூடிபோவாயோ என ஏங்கும் கண்கள்:
கண்ணைக்காட்டி அழைத்த வேளையில்;
நம்மைச் சுற்றிலும்  மழலை முகங்கள்!!
அவர்களோடு அழகாய் ஊர் வளம் வருகையில்,
பகவனைப் பற்றிய சிந்தை மனதிலே - அன்பே;
நீயும்- நானும்; உடலும் உயிருமென்றால், பிரிவோமோ?
நீயும்- நானும், எலும்பும் தசையுமாய் - வலிமையும் எளிமையுமாய்!!
இன்று போல் என்றும் இணைந்தே இருப்போமாக।।।

\- விணன்

# மண்ணை மீட்டெடு சோழா

**அ**ச்சமின்றி **ஆ**வலுடன், எட்டுத்திக்கும் நிதி-திரட்டி,
**இ**ன்முகம் கொண்டு **ஈ**சனுக்கு, அவன்பால் கொண்ட அன்பினாலே,
**உ**யிர்ப்பிழிந்து; **ஊ**தாவானம் தொடும் தூரம்:
**எ**ளிமையான சான்றோர் கொண்டு, **ஏ**ழுகால பூஜையிட்டு
**ஐ**யனே!! மண்ணிற்குச் சிறப்பூட்டிய மாமன்னர்!!!
**ஒ**ற்றைக்கல் லிங்கனுக்கு, **ஓ**ங்கிஉயர்ந்த கற்கோபுரம் எழுப்பி
கலங்கிய மனதிற்கு **ஔ**டகமாய் விளங்க வைத்த
ராஜ ராஜ சோழனே!!
தமிழுக்கு ஓர் ஃ போல, தலைவா - தமிழ்
திருக்கோவிலுக்கு உம் வம்சமே கேடயமாய் காத்திட்டு;
தொண்டுகள் பல புரிந்த நம் மண்ணில்;
நீவிர் மறைந்த கணம்முதலே, ஆங்கிலேயர் உட்பட,
நம்மை அடிமையாக்கி ஆண்டன பல கூட்டம்!!!
ஆயினும், மண்ணை மதித்த மூடர்களுக்கு
உயிர் பிச்சையிட்டு திரும்பச் செய்தோம்:-
இன்றோ! நம் மண்ணை அழிக்கும் நோக்கத்துடன்,
கிளம்பியுள்ளதோர் உட் தேரைக் கூட்டம்:
கூட்டம் கூட்டமாய் வீழ்ந்தாலும்; மேதகு நம்
மண்ணை என்றும், காத்து நிற்போம் மன்னா!!!

- சோழகன் விணன்

# ஸ்ரீ நீ

உன்னை சந்தித்து பிரிகிற நேரம்,
நான் உணரவில்லை- அன்பே,
இப்படி மாறிப் போவேனென்று!!
எந்த பெண்ணைப்  பார்த்தாலும்,
உந்தன் ஞாபகம் நெஞ்சோரத்தில்:
நானும் எத்தனை பெண்களைத்தான்-
காதலிப்பது? குறுகிய காலங்களினுல்?
விரைவில் என்னை வந்துசேர்வாயோ??
என் உணர்வும், இதயமும் உன்னிடத்தில்;
எதிர்பார்பைக் கொண்டு நான்;
வழித்துணையை வருவாயென நீ;
ஒரு வழிப்பாதையில் ஏங்கி நிற்கிறேன்!!!
எப்போதிதை இருவழிப்பாதையாய் மாற்றப்போகிறாய்??

\- விணன்

# காதல்

அமீபாவின் அறிவில் தோன்றி,
ஆடு, மாடு, காக்கை, குருவி;
ஆண், பெண் களவு பூண்டு,
அன்பு பொங்க தழைத்து நின்றேன்;
வெட்டிவேரு வாசம் வீச,
கருத்த மேகம் முத்துக்கள் தூர,
மண்வாசம் மனதை மயக்க,
மக்கள் என்னைப் பகிர்ந்து மகிழ,
சந்தோசமாய் பூவலம் வந்தேன்!
என்னை அழிக்க எழுந்ததோர் கூட்டம்:
காமம் தழைக்க காதல் கொண்டு,
வேலை முடித்து விலகிச் சென்று,
என்னை வதைக்க காரணம் என்ன?
அன்பை பெற பொய்மை காட்டி,
காதல் என்று பெயரும் சூட்டி,
பெற்றோர் மனதில் வெறுப்பை ஊட்டி,
இழைத்தனர் எந்தன் சவப் பெட்டி!!!
அலைகடலாய் பறந்து விரிந்து,
அனைவரையும் அன்பால் அணைத்து,
அறிவு வளர அருவியாய் எழுந்து,
என் சாரலில் உன்னை நனைப்பேன் கண்ணா!
கடலில் நஞ்சு கலந்தால் கூட,
கலங்க மாட்டேன் அன்பு நண்பா:
ஒன்று மட்டும் நினைவில் கொள்ளடா;
உலகில் காதல் மறையா மருந்து!!!

- விணன்

# காதல் ஈந்த பார்

என் கண்கண்ட கதிரவனே,
　　மனக் கடலை கடத்திய கள்வனே,
உன்முதல் பார்வையில் நானோ,
　　நின்றேன் என் பெண்மையை மறந்து!
என்னை நீயும் கடந்து செல்கையில்,
　　என்னவன் வாசம் உணர்ந்தேன் முதன்முறையாய்:
சுற்றி வந்தேன், நித்தமும் உன்னையே -
　　விலகிச்சென்றாய் ஏன்? சித்தனைப் போலவே -
பின்தொடர்ந்தேன் உன் மாளிகை தேடி;
　　அடி வைத்தாய் உன் ஓலைக்குடிசையிலே,
அன்பே! உன்னையே நம்பிய குடும்பம்:
　　மழலை முகம் மாற உன்னிரு தங்கைகள்,
உழைத்தே தேய்ந்த ஒற்றைக்கால் தாயார்-
　　பனைமரத்தடியில் சுருண்டு கிடைக்கும் தந்தை,
கண்ணாடியில் கலர்கனா காணும் தம்பி,
　　இவர்களின் பிராணம் காக்கும் கடவுள் உமக்கு::
என்னை நினைக்க நேரம் இல்லைதான்!!
　　கனத்த இதயத்தோடு திரும்பிய என்னை,
பற்றின இரு கரங்கள்; "அண்ணி: வாங்க!!"
　　மனதில் பலகோடி மலர்கள்பூக்க; அதற்கு
தண்ணீர் ஊற்றியபடி என் இரு கண்கள்!
　　காதல் சொல்ல வந்தவள் என்னை,
கரம் பிடித்தாய் கணவனாய் வந்து:
　　கலங்கிய கண்துடைக்கும் உன்கரம் பிடித்து,
மார்பு சாய்கையில் சிரித்தபடி நான்,

"எதிர்காலம் கண்டு பயந்த உமக்கு,
உறுதுணையாய் என்றும் நிற்பேன் தலைவா:"
என் கன்னத்தில் குதித்த கண்ணீர்துளிக்கு
உன் மார்பில் பதித்த என் முத்தம் உரைத்தது:--
செல்வதில் மிதந்த ஏழை எனக்கு,
இராஜகுமாரனின் வாரிசு கிட்டியது!!
பணத்தில் பற்றற்ற மன்னர் வரவால்,
எந்தைக்கு மரணமும் மகிழ் வூட்டியது:
தலைவன் தன் கொடையின்கீழ் நாடும்நெகிழ்ந்தது।
மக்கள் மனதில் மதிப்பும் வளர்ந்தது;
நாட்டின் செல்வச்செழிப்பு நிரந்தரமாயிற்று:
ஒவ்வொரு வீட்டிலும் விளக்கு எரிந்தது,
மனம் நிம்மதியில் உறங்க எண்ணியது:
விதை முளைத்த சில நாட்களிலே - என்
ஆலமரமும் அடியோடு சாய்ந்தது ।।।:

**விணன்**

# காதலிக் (க) விதை

**- A decent proposal**

அனல் பறக்கும் பாலைவனம் நடுவே,
சோலைவனம் போல் அவதரித்தாய் - அன்பே!
சமதுருவம் எதிரெதிரே நிற்க, காந்தமும்
ஒன்றினையும் உன் கடைக்கண் பார்வையில்:
எழுதுகோல் பூமழை பொழியும் - பெண்ணே,
உன் முகம்பார்த் தெழுதத் தொடங்கையில்:
ஆழ்கடலில் அழுத்தம் குறையும் - அழகே,
உன் கூந்தலுதிர்த்த மலருக்கு வழிகொடுக்கையில்:
மல்லிகையும் மணமற்றுப் போகும் - அமுதே,
நீ என்னைக் கடந்துசெல்லும் நாழிகையில்:
பறவைகளனைத்தும் என்பெயர் பாடும் - அன்பே,
நீயும்  என்னை அழைக்கத் தொடங்கையில்:
களவும் கூட கௌரவமாகும் - ஆருயிரே,
உன்னுடன் நான் மேற்கொள்ளும் தருணத்தில்:
பூங்காற்றும் அர்ச்சிக்கும்: அழகு தசைச்சிலையே,
நீயோ என்னை நாடும் வேளையிலே::
இந்த இரும்பைக் கரைப்பார் யாருமிலர்!
உம் மூச்சுக்காற்றில் கரைத்துப் போவாயோ??

- கரையக் காத்திருக்கும் காதலன்

- விணன்

# காதலுக்காக

ஆழ்ந்த உறக்கத்தில் உன்
முகம் கண்டேன்- அன்றுமுதல்
உறங்க மறந்தேன்; காகித-
கண்ணாடியில் உன் முகம் கண்டேன்;
எழுதுகோலை நான் உடைத்தெறிந்தேன்:
கடற்கரையில் நானும் உன் முகம் கண்டேன்;
அன்றுமுதல் நீல கடல்வெறுத்தேன்:
காற்றில் கூட - பெண்ணே,
உன்முகம் கண்டேன்- உனக்காக;
சுவாசிப்பதையே வெறுத்துவிட்டேன்!!!

**விணன்**

# மாயவிசை

இமயமும் ஒரு குன்றாகும்;
இதயம் வலிமை பெறுகையில்-
மரியானாவும் சிறு குட்டையாகும்;
மனம் ஆழம் ஆகையில்!!

**விணன்**

# வேண்டும் ஓர் பிறவி

**காதல□ ாக**

விடியலில் துயிலுரிக்கும் முதல் நொடிமுதல்
நடுநிசி கண்மூடும் இறுதி நொடிவரை
என்றுமுன் எண்ணம் ஆட்கொண்ட தென்னை!
கலையாத கனவுகள் என்றும் சுகம்தானே:
ஏனோ இப்பாவிக்கு அப் பாக்கியமில்லை!
கலைந்த கனவுதனில் கலங்கின கண்கள் !!
கண்ணீர்த் துளியனைத்தும் மண்ணில் விதைந்ததா?
விதைந்த கண்ணீரில் மீண்டும் காதல் மலர்ந்தது!!!
எட்டுத்திக்கும் சுற்றி வந்தேன்; நான்
பெரும்-கவிகனென்று கர்வத்தோடிருந்தேன்:-
பேனா-மை என்னும் விலங்கினைக் கொண்டு
வார்த்தைகளை தனிச் சிறையிலிட்டேன்; பெரும்
கவிக்கோட்டையை காகிதத்தால் எழுப்பி! அழகிய
நினைவுகளையும், கனவுகளையும் உருவகப்படுத்தினேன்:-
காவலர்கள் என்று தனிச் சிறப்பிட்டு,
அன்பே!! உன்னைக்கண்டேன், உறைந்து நின்றேன்;
உணர்ந்துகொண்டேன் நானொரு அரக்கனென்று!!
நிறுத்திக்கொண்டேன், தகர்த்தெறிந்தேன்,
கிழித்த அனைத்தையும் தீயிலிட்டேன்!!
அவை அனைத்தும் அழகே, உன்முன்
சாம்பலாய்ப் போனது; என் தலைகனத்தோடிணைந்து!
பெண்ணே உயிர்விடும் ஓர்நொடி முன்னே,
உந்தன் காதல் கனிந்தால் என்மேல்;
என் ஜீவன் உனைவந்து சேரும்,

கடவுளையும் உன் அடிமையாய் கொண்டு:
காதலே எனை ஏற்பாயோ நீ??
உந்தன் சம்மதம் உரைத்தாய் சரியென;
பெண்ணே ஏனிந்த தாமதம் கண்ணே?
உன் காதல் வந்ததால் தொலைத்தேன் என்னையே:-
நீ இன்றி என் வாழ்வே பொய்தானே!!
குழந்தை போலெனை நச்சரித்து, இன்று
பிரிந்தாய் ஏன் துடிக்கவிட்டு என்னையும்???
கனவை? நினைவை? மாண்டாய் என் மடிதனிலே;
மீண்டும் பிறப்பாயோ? உதிப்பேன் உனக்காக!!!

வேண்டும் ஓர் பிறவி - காதலனாக

விணன்

# ஆசை

எனக்கென்று ஓர் உலகம்;
வானில் மேகங்களாய் நீமட்டும்:
பூத்துக்குலுங்க நான் விரும்பவில்லை!
உன் கண்கள் கலக்கினால்,
என் சித்தமே நடுங்குமடி;
எனக்காய் அழுகாதே- கண்ணே;
உன் அன்பெனக்கு புரியுமடி-
என்னை உமக்கும் பிடிக்குமெனில்,
பூக்களால் என்னை மூழ்கவை,
கண்ணீரல்ல, புன்னகையை சிந்தி:

என்றும் உன் கா(த)லடியில்

- விணன்

# துயரத்தில் தந்தை

ஆழ்கடல் முத்தெடுத்து,
ஆறுமுறை பட்டை தீட்டி,
அடுப்படியில் கருக்கவிட்டேன்,
தவறானவனை தேர்வுசெய்து !!

- விணன்

# கருவறை முதல் கல்லறை வரை!

ஈரைந்து மாதங்களில், சிறைவாசம் கடந்துவிட்டன;
காலம் கடக்க கண்டறிந்தேன்,
சிறை அல்ல, அவள் -  சிலை என்று;
மீண்டும் செல்லலாமா? ஏங்கி நின்றேன்!!
வந்தால் அவள்; தந்தாள் மடி;
எல்லையே அன்னை: கண்டேன் என்னையே!!
இன்பம் தந்தாள், சிறு துன்பமும் தந்தாள்,
ஊடல் கொண்டோம், காதல் என்றோம்;
பிடிக்கவில்லையோ! பிரிந்து சென்றால்!
வேண்டியது கிட்டியது:
கருவறை அல்ல கல்லறை!!!

\- விணன்

# வரவேற்பு

மண்ணோடு விதை சேர்த்து,
மணத்தோடு மலர் பூத்தது போல்;
மனதோடு மனம் சேர்ந்து,
மனம் மணம் வீசும் இம்மணநாளில்;
மனதை பரிமாறும் வேளையிலே:
அன்பினால் உரமிட்டு, தங்கள்-
இவ்விதைக்கு வளம் சேர்க்க,
உங்கள் அனைவரையும் வரவேற்கும்,

\- விணன்

# நன்றி

பிரபஞ்ச ஞானாம் உள்ளடக்கிய "கபாலம்";
வழி பார்க்கவும், விழி பேசவும், "கண்கள்";
தென்றல் ஓசையையும் கூர்ந்தீர்க்கும் "செவிகள்";
சுவாசிக்கவும், மணம் உணரவும், "நாசி";
பேச மட்டுமின்றி, சுவை அறியவும், "நாவு";
அதனருகே, மனதை பிரதிபலிக்கும் "பற்கள்";
இரு பேர் இமயமென "தோள்கள்",
அகண்ட மார்புக்கூட்டினுள், இரும்பையே உருக்கி,
உடல் முழுதும் சுழற்றுவிக்கும் "இருதயம்";
வலிமை கொண்ட இரு "கரங்கள்",
அதன்நுனியில் வாரி வழங்கும் "விரல்கள்";
மாமலையையும் கட்டியிழுக்கும் அழகிய "சிற்றிடை",
மனிதகுலத்தின் சந்ததியாய், பலகோடி "மாணிக்கங்கள்";
மரத்தின் ஆணிவேர்போல் அம்சமான "இருதொடைகள்":
மேல்நோக்கியே திகழும் தீபம்போல்,தனியொருவனையும்;
நிமிர்ந்து நடக்கச் செய்யும் "முதுகெலும்பு":
தன்னை அங்கீகரிக்க வில்லை எனினும்;
ஓடி உழைக்கவும், சுமந்து செல்லவும்,
பூமித்தாய்க்கு நிகரான "கால்களும், பாதங்களும்":
இத்தகு அமைப்பை ஒருசேர படைத்த,
இயற்கைக்கும், இருந்தால் இறைவனுக்கும், பலகோடி
நன்றி, நன்றி, நன்றி, நன்றி, நன்றி:

நன்றி மறவா
- விணன்

# உங்கள் படைப்புகளை வெளியிடலாமே

## உங்கள் படைப்புகளை மின்னூலாக வெளியிடலாம்

**படைப்புக்களை யாவரும் பகிரும் உரிமை தரும் கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம் பற்றி-**

http://www.wired.co.uk/news/archive/2011-12/13/creative-commons-101
https://learn.canvas.net/courses/4/wiki/creative-commons-licenses

**உங்கள் விருப்பமான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமத்தை இங்கே தேர்தெடுக்கலாம்**
http://creativecommons.org/choose/

*மேற்கண்டவற்றை பார்த்த / படித்த பின், உங்கள் படைப்புகளை மின்னூலாக மாற்ற பின்வரும் தகவல்களை எங்களுக்கு அனுப்பவும்.*

1. *நூலின் பெயர்*
2. *நூல் அறிமுக உரை*
3. *நூல் ஆசிரியர் அறிமுக உரை*
4. *உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்*
5. *நூல் — text / html / LibreOffice odt/ MS office doc வடிவங்களில். அல்லது வலைப்பதிவு / இணைய தளங்களில் உள்ள கட்டுரைகளில் தொடுப்புகள் (url)*

*இவற்றை* **skyfoxpublishing@gmail.com***க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.*

*விரைவில் மின்னூல் உருவாக்கி வெளியிடுவோம்.*

**நன்றி!**

ISBN 978-81-939536-0-0

9 788193 953600